


නාවෙළි
NAAVELI
# நாவெளி
பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்
DIVISIONAL MONTHLY E- MAGAZINE ප්‍රාදේශීය මාසික ඉ - සඟරාව




www.navithanveli.ds.gov.lk moha.divi.navithanveli@gmail.com DSNavithanveli 0755424333

மலர்: 08 ✦ இதழ்:21 ✦ 2024ஆம் வருடம் ஆவணி மாதம் இருபத்தைந்தாம் திகதி


## பனைசார் பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கிலான பயிற்சி பட்டறை



2024ஆம் ஆண்டு சௌபாக்கியா அபிவிருத்தி பணியகத்தின் பனைசார் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கிலான பயிற்சி பட்டறையானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2024 ஆகஸ்ட் 05 மற்றும் 06 ஆந் திகதிகளில் நாவிதன்வெளி விதாதா வள நிலையத்தில் இடம்பெற்றது. நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 20 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பனை அபிவிருத்தி சபையின் ஊடாக இப்பயிற்சி வழங்கப்பட்டது.

தொடர் 03ஆம் பக்கம்...

## PSDG வேலைத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கான தையல் இயந்திரம் வழங்கி வைப்பு




மாகாணங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை PSDG வேலைத்திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான உயர்தர தையல் இயந்திரங்களை நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச

தொடர் 10ஆம் பக்கம்...

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் செயற்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கான ஆடுகள் வழங்கிவைப்பு



கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துகின்ற கமத்தொழில் மற்றும் பெருந் தோட்ட அமைச்சின் 2024ஆம் ஆண்டுக்கான ஆடு வளர்ப்புச் செயற்திட்டத்தின்கீழ் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட

தொடர் 10ஆம் பக்கம்...

## அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் போட்டி



இந்துசமய கலாசார அலுவலகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின்

தொடர் 10ஆம் பக்கம்...

## மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான உழுந்து/பயறு பயிர்ச்செய்கை திட்டம்



கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட கிராமப்புற வருமானம் குறைந்த மக்களுக்கான

தொடர் 10ஆம் பக்கம்...

## ஆசிரியரிடமிருந்து...

நாவெளி மலர்-08 இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் அளவற்ற மகிழ்ச்சி. சமூகத்தில் பரந்து கிடக்கின்ற பல்வேறு செய்திகள், மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர் - 08 வெளிவருகின்றது. உண்மையில் "நாவெளி" மின்னிதழ் வாசகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறியக் கிடைத்த போது ஒரு புத்துணர்வு ஏற்பட்டதை என்னால் உணர முடிந்தது. அத்தகைய உணர்வினைத் தந்த "நாவெளி" வாசகர்களுக்கு இதயம் கனிந்த நன்றிகள். அதேபோல் நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தின் பரந்துபட்ட பார்வைப் பரப்புக்குள் இருந்தும், வெளிப்பிரதேசங்களில் இருந்தும் கிடைக்கப் பெறுகின்ற ஆக்கங்கள் "நாவெளி" மின்னிதழ் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும் போது, உங்கள் உற்சாகம் மேலும் வலுப்படுத்தப்படத்தான் போகின்றது.

பொதுவாகவே ஒவ்வொருவரின் பிறப்பும் ஒரு கடமையின் நிமித்தம் நிர்ணயிக்கப்பட்டிருக்கும். அதைக் கண்டு உணர்ந்து வாழ்க்கைப் பாதையை ஒழுங்கமைத்துக் கொள்பவர்கள் சிறந்த நபர்களாக சமூகத்தில் அடையாளப்படுத்தப்படுவர். அந்த வகையில் நேர்மையாக இருப்பவர்கள் தன்னையும், பிறரையும் நேரிய பாதையில் கொண்டு செல்வதற்கு இந்த சவால் மிக்க உலகில் அதிகம் போராட வேண்டியுள்ளது.

அதேபோல், எப்பொழுது ஒரு நாடு ஊழலற்ற நாடாக மாறுகின்றதோ, அப்பொழுதுதான் அந்த நாட்டின் பொருளாதாரமும், மக்களின் வாழ்க்கைத்தரமும், வளர்ச்சி அடையும். நாட்டில் நடக்கும் ஊழல், மற்றும் இலஞ்சத்தை ஒழிக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் அத்தியாவசிய கடமைகளில் ஒன்றாகும். உலகிலுள்ள அநேகமான நாடுகளில் ஊழல் நடைபெற்று வருவதனால் அந்நாடுகளின் ஜனநாயகம் பாதிப்படைகின்றது. இதனால் ஒவ்வொரு நாடும் பாரிய பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றது. சிறு ஊழல் கூட அரசினைப் பெரிதும் பாதிக்கின்றது என்று கூறுவதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஊழல் ஒழிப்பு, மற்றும் இலஞ்ச ஒழிப்பு என்பது ஒரு நாளில் முடிவடைகின்ற காரியம் இல்லை. இதனை தனிநபர்கள் முதல் அரசாங்கம் வரை இணைந்து செயற்படுத்தினால் மட்டுமே ஒழிக்க முடியும். ஊழல் அற்ற நாடு தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் போது ஊழல் குறைவடையும். ஊழலற்ற நாடுகளாக அனைத்து நாடுகளும் மாறும்போது அந்நாடுகளின் பொருளாதாரமும் வளர்ச்சியடையும்.

ஊழலை ஒழிப்போம், சிறந்த தேசங்களைக்கட்டி எழுப்புவோம்.

என்றும் அன்புடன்...
-ஆசிரியர்.

### நடிப்பு சுதேசிகள்

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமு மின்றி,
வஞ்சனை சொல்வா ரடீ! - கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி.
கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்ற லன்றி,
நாட்டத்தில் கொள்ளா ரடீ! - கிளியே!
நாளில் மறப்பா ரடீ
சொந்த அரசும்புவிச் சுகங்களும் மாண்பு களும்
அந்தகர்க் குண்டாகு மோ? - கிளியே!
அகலிகளுக் கின்ப முண்டோ ?
கண்கள் இரண்டிருந்தும் காணுந் திறமை யற்ற
பெண்களின் கூட்டமடீ! - கிளியே!
பேசிப் பயனென் னடீ
யந்திர சாலை யென்பார் எங்கள் துணிகளென்பார்
மந்திரத் தாலே யெங்கும் - கிளியே!
மாங்கனி வீழ்வ துண்டோ !
உப்பென்றும் சீனி என்றும் உள்நாட்டுச் சேலை என்றும்
செப்பித் திரிவா ரடீ! - கிளியே!
செய்வ தறியா ரடீ!
தேவியர் மானம் என்றும் தெய்வத்தின் பக்தி என்றும்
நாவினாற் சொல்வ தல்லால் - கிளியே!
நம்புத லற்றா ரடீ!
மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர் செய்யப்
பேதைகள் போலு யிரைக் - கிளியே
பேணி யிருந்தா ரடீ!
தேவி கோயிலிற் சென்று தீமை பிறர்கள் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக் - கிளியே
அஞ்சிக் கிடந்தா ரடீ!

மாகாகவி பாரதியார் கவிவரியில் இருந்து...




01. உங்கள் புன்னகையில் உள்ள சோகத்தையும்,கோபத்தில் உள்ள காதலையும், மௌனத்தில் உள்ள காரணத்தையும் யார் புரிந்து கொள்கிறார்களோ அவர்களே உங்கள் அன்புக்கு உரிமை உடையவர்.

02. உரிமை இல்லாத உறவும், உண்மை இல்லாத அன்பும், நேர்மை இல்லாத நட்பும், நம்பிக்கை இல்லாத வாழ்க்கையும் என்றும் நிரந்தரமில்லை.

03. இழக்கும் வரை ஒருவரின் அருமை நமக்குப் புரிவதில்லை.

04. ஒருவரின் அருமையை அவர்களை பிரியும் தருணத்தில் மட்டுமே உணரமுடியும், நினைவுகளின் துணையோடு.

05. ஒருவரை இழக்கும்போது வரும் கண்ணீரை விட அவர்களை, இழக்கக்கூடாது என்று நினைக்கும்போது வரும் கண்ணீருக்கு இன்னும் வலி அதிகம்.

06. எதுவுமே உயர்ந்தது இரண்டு முறை, கிடைப்பதற்கு முன்பு தவற விட்ட பின்பு.

07. தனிமை கொஞ்சம் வித்தியாசமானது. நாமே அதை எடுத்துக்கொண்டால் அது இனிக்கும் மற்றவர்கள் நமக்கு அதைகொடுத்தால் கசக்கும்.

08. எல்லோருடைய இதயத்திலும் காயங்கள் உண்டு. அதை வெளிப்படுத்தும் விதம் தான் வித்தியாசம். சிலர் கண்ணீராக, சிலர் புன்னகையாக.

09. அழுது நீ கோழையாகாதே! உனக்கு நண்பன் நீயே! உன்னை காப்பற்ற வருபவர் எவர் உளர்? நீயே உன் காவலன்....ஆதலினால் யாரையும் எதற்கும் எதிர்பார்க்காதே!

# தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான பனைசார் உற்பத்திகளான பனம்பழ சவர்க்காரம், ஷம்போ மற்றும் பேஸ்வோஸ் என்பன தயாரிக்கும் பயிற்சி

T.Sasidevi - Devolopment officer



2021ஆம் ஆண்டு சௌபாக்கியா அபிவிருத்தி பணியகத்தினால் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 7000 இற்கும் அதிகமான பனை மரங்கள் காணப்படுவதனை மையமாகக் கொண்டு 15 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இவ் ஒதுக்கீட்டின் மூலம் பனைசார் கைப்பணி பொருட்கள், பனம்பழம் சார் பனம் பானம், பனாட்டு மற்றும் பனங்கிழங்கு, ஒடியல் போன்ற பல்வேறு பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு நாவிதன்வெளி பனை சார் கற்பகம் சந்தைப்படுத்தல் கட்டிடத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டு, பயனாளிகள் வருமானம் ஈட்டி வருவது குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் 2024 ஆம் ஆண்டு சௌபாக்கியா அபிவிருத்திப் பணிய கத்தினால் பெறுமதி சேரக்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் பொருட்டு 1.12 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பனம்பழ சவர்க்காரம், பனம்பழ Shampoo, பனம்பழ Face wash என்பன தயாரிக்கும் நிகழ்வானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப் பட்டது. நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. திலகராணி கிருபைராஜா அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் நெறிப்படுத்தலின் கீழ் 20 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பனை அபிவிருத்தி சபையின் மூலம் பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டது.

இப்பயிற்சி பட்டறையானது 2024.08.05 மற்றும் 2024.08.06 ஆகிய இரு தினங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்த டாக்டர். அனுலக்ஷி மற்றும் அவரது சிரேஷ்ட மாணவர் ஆகியோர்களால் நடாத்தப்பட்டது. பிரதேச செயலகத்தினால் உபகரண கொள்வனவுகள் செய்து வழங்கப்பட்டு பயாளிகள் பங்களிப்புடன் இப் பயிற்சி நெறியானது இடம் பெற்றது.

மேலும், இப்பயிற்சிப் பட்டறையில் பயனாளிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் பனம்பழ மூலப் பொருளினைக் கொண்டு முடிவுப் பொருட்களான இயற்கையான பனம் சவர்க்காரம் மற்றும் Shampoo, Face wash என்பன தயாரிப்பது தொடர்பான பயிற்சியினை பெற்றுக் கொண்டனர்.

எதிர்வரும் காலத்தில் பிரதேச ரீதியில் மட்டுமன்றி தேசிய ரீதியிலும் இத்திட்டமானது கொண்டு செல்லப்படும் என்பதில் ஐயமில்லை. எதிர்காலத்தில் இது போன்ற திட்டங்கள் கொண்டு வரப்படுமானால் குறைந்த வருமானம் உள்ள பயனாளிகள் உயர் வருமானத்தினை ஈட்டுவதற்கு ஏதுவாக அமையும் என்றே கூறலாம்.
















# ஒரு நாட்டின் அபிவிருத்தியில் தரமான பொதுச் சேவையை வழங்குவதன் முக்கியத்துவம்

பத்திநாதன் இருதயராஜா, கல்லடி-மட்டக்களப்பு



எந்தவொரு தேசத்திலும், தரமான பொதுச் சேவை வழங்கல் அதன் அபிவிருத்திக்கு முக்கிய அடித்தளங்களுள் ஒன்றாகும். சுகாதாரம் மற்றும் கல்வியை வழங்குவது முதல் உட்கட்டமைப்பு மற்றும் பொதுப் பாதுகாப்பைப் பராமரிப்பது வரை, இந்த சேவைகளின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் ஆகியவை ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். தரமான பொதுச் சேவை வழங்கலானது பொருளாதார வளர்ச்சியை வளர்ப்பது மட்டுமல்லாமல், சமூக சமத்துவத்தை மேம்படுத்தவும், பொது சுகாதாரத்தை மேம்படுத்தவும் மற்றும் நிலையான அபிவிருத்தியை உறுதி செய்யவும் உதவுகின்றது. இக் கட்டுரை ஒரு நாட்டின் அபிவிருத்தியில் தரமான பொது சேவை வழங்கலின் பன்முக முக்கியத்துவத்தை ஆராய்கிறது.

ஒரு தேசத்தின் அபிவிருத்திக்கு தரமான பொது சேவைகள் வழங்கல் பங்களிக்கும் முதன்மை வழிகளில் ஒன்று பொருளாதார வளர்ச்சி ஆகும். நம்பகமான போக்குவரத்து வலையமைப்புகள், நிலையான எரிசக்தி விநியோகங்கள் மற்றும் பயனுள்ள தகவல் தொடர்பு அமைப்புகள் போன்ற திறமையான பொதுச் சேவைகள் வணிகங்களுக்கான செயற்பாட்டுச் செலவுகளைக் குறைக்கின்றன. வணிகங்கள் குறைவான குறுக்கீடுகளை எதிர்கொள்ளும்போதும் மற்றும் நிலையான உள்கட்டமைப்பை அணுகக்கூடியதாய் உள்ளபோதும், அவற்றின் உற்பத்தித்திறன் அதிகரிக்கிறது. உதாரணமாக, நன்கு பராமரிக்கப்படும் சாலை வலையமைப்பு போக்குவரத்து செலவுகள் மற்றும் கொண்டு செல்லல் நேரத்தை குறைக்கிறது, வர்த்தகம் மற்றும்




கொண்டு செல்லலை மேம்படுத்துகிறது. மேலும், வணிக நடவடிக்கைகளுக்கு சாதகமான சூழலை உருவாக்குவதன் மூலம் தரமான பொதுச் சேவைகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களை ஈர்க்கின்றன. இதை அடிப்படையாகக் கொண்டு, இது வேலை உருவாக்கம் மற்றும் பொருளாதார விரிவாக்கத்தை தூண்டுகிறது. சமூக சமத்துவம் மற்றும் அனைவரினதும் உள்வாங்கலை மேம்படுத்துவதற்கு தரமான பொது சேவைகள் இன்றியமையாதவை. கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலன் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கான அணுகல் ஒரு அடிப்படை உரிமையாகும், இது சமூக-பொருளாதார நிலையால் கட்டுப்படுத்தப்படக்கூடாது.

அனைத்து குடிமக்களும் இந்த சேவைகளை ஒப்புரவாக அணுகுவதை உறுதி செய்வதன் மூலம், சமூக ஏற்றத்தாழ்வுகளை குறைக்கும் விதத்தில் ஒரு நாடு செயற்பட முடியும். எடுத்துக்காட்டாக, ஒரு வலுவான பொதுக் கல்வி அமைப்பு அனைத்துப் பின்னணியிலிருந்தும் தனிநபர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்துவதற்கும் பொருளாதாரத் திற்கு பங்களிப்பதற்கும் வாய்ப்புகளை வழங்குகிறது. இதேபோல், நாடளாவிய சுகாதார சேவைகள் சுகாதார ஏற்றத்தாழ்வுகளைத் தடுக்கின்றன மற்றும் ஆரோக்கியமான பணியாளர்களை உருவாக்குகின்றன. எனவே, தரமான பொதுச் சேவைகள் அனைவரையும் உள்ளடக்கும் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உதவுகின்றன.

தொடரும்...

# ஜனாதிபதி தேர்தலின் விருப்பு வாக்கு முறைமை


KM.Rinos - Development Officer







இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தலினை செப்டம்பர் மாதம் *21* ஆம் திகதி முகம் கொள்ள விருக்கிறோம். இலங்கையில் ஜனாதிபதித் தெரிவானது நேரடியாகவே நடைபெறுகின்றது. இம்முறை ஜனாதிபதி தேர்தலானது வழமையான முறைமையைவிட சற்று அதிகமான எதிர்பார்புடனே பார்க்கப்படுகிறது. காரணம் 4 பிரதான வேட்பாளர்கள் பலமான போட்டி மேலும் 39 வேட்பாளர்களில் யாரும் அறுதிப் பெரும்பான்மையை பெறத் தவறின் தேர்தல் சட்டங்களில் கூறப்பட்ட விருப்பு முறைமை முதன்முறையாக ஜனாதிபதி தேர்தலில் கணக்கெடுக்கப்படலாம் (50%+1 கிடைக்க பெறாவிட்டால்) என எதிர்பார்க்கப்படுகிறது. எமது நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் முறையானது Majority என்று குறிப்பிடப்படும் ஒரு நடைமுறையாகும். அதாவது பெரும்பான்மையாகக் கிடைக்கும் வாக்குகள் மீது அதிக கவனத்தைச் செலுத்தும் முறையாகும். அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் போட்டியாளர்கள் இருவருக்கிடையில் கடும்போட்டி ஏற்படும் சந்தர்ப்பத்தில் அறுதிப் பெரும்பான்மையை பெறத் தவறின் வெற்றி வாய்ப்பானது அந்த இருவருடன் இணைந்து போட்டியிடும் ஏனைய வேட்பாளர்களின் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.




### விருப்பு வாக்கு முறைமை என்றால் என்ன ?

ஒரு தேர்தலில் வாக்காளரது தெரிவு ஒரு வேட்பாளராக இருப்பின் அவரது தெரிவினை வேட்பாளரது பெயர் மற்றும் சின்னங்களுக்கு நேரே X என அடையாளமிடுவதன் மூலமாக தெரியப்படுத்தலாம்.

குறிப்பிட்ட தேர்தலில் மூன்று வேட்பாளர்களை விட அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்களாயின் வாக்காளரது தெரிவு ஒரு வேட்பாளரை விட அதிகமாக இருப்பின் இலங்கை தேர்தல் சட்டத்தின் அடிப்படையில் தேவையெனில் ஒருவருக்கு அல்லது இரண்டு பேருக்கு அவ்வாறில்லாவிடின், மூவருக்கு தமது விருப்பு வாக்குகளை 1, 2, 3 என்ற அடிப்படையில் குறிப்பிட்டு வழங்க முடியும்.

### தேர்தலுக்கு பின் விருப்பு வாக்குகள் கணக்கிடப்படும் முறைமை

வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் ஒவ்வொரு வாக்குச் சாவடியின் மூத்த தலைமை அலுவலர் (SPO) பொலிஸ் பாதுகாப்பின்கீழ் குறிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் மற்றும் பிற அச்சிடப்பட்ட உறைகளுடன் கூடிய வாக்குப்பெட்டிகளைச் சேகரித்து வாக்குச் சாவடியின் உதவித்தெரிவத்தாட்சி அதிகாரியிடம் (ARO) ஒப்படைப்பார். வாக்கெண்ணும் பணி மாவட்ட செயலகங்களில் (கச்சேரி) அல்லது தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பாடசாலைகள் போன்ற அரச கட்டடங்களில் நடாத்தப்படும்.

ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திற்கும் பொறுப்பாக சிரேஷ்ட கணக்கெடுப்பு அதிகாரி (CCO), 08 உதவித்தெரிவத்தாட்சி அலுவலர்கள் (ARO) மற்றும் அவர்களின் உதவி அதிகாரிகள், மற்றும் 16 வாக்குச் சாவடியின் தலைமை அலுவலர்கள் (SPO) என சுமார் 41 ஊழியர்கள் நியமிக்கப்படுவர். மேலும் அவர்களோடு சர்வதேச கண்காணிப்பாளர், உள்நாட்டு கண்காணிப்பாளர்களும் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்கள் சார்பாக அவதானிக்க, கட்சிக்கு தலா 05 முகவர்கள் என நியமிக்க அனுமதிக்கப்படுகின்றது. அஞ்சல் வாக்கு எண்ணும் மையங்களுக்கு தலா 02 பார்வையாளர்கள் என வாக்கெண்ணும் நிலையத்தில் காணப்படுவார்கள். வாக்கெண்ணும் முறைமை 3 படிமுறைகளில் /கட்டங்களில் இடம்பெறும்.

**கட்டம் *01*.** வாக்குச்சாவடிகளிலிருந்து பெறப்பட்ட வாக்குப் பெட்டிகள் தனித்தனியாக திறக்கப்படுகின்றன. ஒவ்வொரு பெட்டியிலும் வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு பிழையாக அல்லது முறையற்ற முறையில் அளிக்கப்பட்ட வாக்குகள் நிராகரிக்கப்பட்டு அனைத்து அதிகாரிகளின் முன்னிலையில் மீண்டும் வாக்குச் சீட்டுகள் எண்ணப்படும்.

**கட்டம் *02*.**


இரண்டாம் கட்டத்தின் 2ஆவது துணை கட்டத்தில் வாக்கெண்ணும் மேசைகளை 05 பகுதி / குழுக்களாக பிரிக்கப்படும். ஒவ்வொரு கட்சிக்கும்

குழுவிற்கும் அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் தனித்தனியாக எடுக்கப்பட்டு அடுத்த குழு அதிகாரிகள் வரிசைப் படுத்தப்பட்ட மேசைக்கு வாக்குச் சீட்டுகள் மீண்டும் அனுப்பப்பட்டு எண்ணப்படும். பின்னர் அடுத்த குழுவினால் வாக்கு சீட்டுக்கள் ஒவ்வொரு 50 சீட்டுகள் கொண்ட கட்டுகளாக பெட்டியில்/ கொள்கலனில் இடப்படும். ஒவ்வொரு பெட்டியில் / கொள்கலனிலும் உள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை மற்றும் குறியீடு சரிபார்க்கப்பட்டு மீண்டும் எண்ணப்படும். பின்னர் ஒவ்வொரு கட்சி / குழுவுக்கும் வாக்களிக் கப்பட்ட எண்ணிக்கை கணக்கிடப் பட்டு முடிவு பெறப்படுகின்றது. அனைத்து அதிகாரிகள், கட்சி பிரதிநிதிகள், உள்நாட்டு, வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் இச்செயற்பாடு இடம்பெறும்.



### கட்டம் 03.

தேர்தலில் 50%+1 வாக்கினை எவரும் பெறவில்லை எனின் 3 ஆம் கட்டத்திற்கு வாக்கெண்ணும் முறை செல்லவேண்டி வரும். விருப்பு வாக்கெடுப்பில் 2 ஆம் கட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்ற முதலிரு வேட்பாளர்கள் தவிர்ந்த ஏனைய வேட்பாளர்கள் தேர்தல் போட்டியிலி ருந்து நீக்கப்பட்டு நீக்கப்பட்ட வேட்பாளர்களின் (37 பேரின்) விருப்பு வாக்குகளில் 2 ஆம் கட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்ற முதலிரு வேட்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட 2 ஆம் விருப்பத்தேர்வுகள், 3 ஆம் விருப்பத்தேர்வுகள் கணக்கிடப்பட்டு கிடைக்கப் பெற்ற அனைத்து வேட்பாளர்களின் (37 பேரின்) விருப்பங்களும் கணக்கிடப்பட்டு எண்ணிக்கையிடப்படும்.






ஒவ்வொரு கட்சி / குழுவால் பெறப் பட்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் மற்றைய கட்சி / குழுவால் பெறப்பட்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை இரண்டு அறிக்கைகளாக தயாரிக்கப்பட்டு மாவட்ட தெரிவத் தாட்சி அலுவலரின் கீழ் நிறுவப்பட்ட முடிவுகளை தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு தெரியப்படுத்தும் நிலை யத்தில் ஒப்படைக்கப்படுகின்றது.




**முடிவுகளின் அறிவிப்பு.**

முடிவுகள் அட்டவணைப்படுத்தப்பட்டு அனைத்து எண்ணும் மையங்களிலிருந்தும் எண்ணும் அறிக்கைகள் ஆணைக் குழுவுக்கு கிடைத்த பிறகு முதலில் ஒவ்வொரு கட்சியும் / குழுவும் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப் படுகின்றது. ஏற்கனவே மேலே கூறப்பட்டது போல் தேர்தலில் 2 ஆம் கட்டத்தில் எவரும் 50%+1 வாக்கினை பெறவில்லை எனின், விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு பட்டியல்கள் தயாரிக்கப்படும். முதன்மை நிலையில் உள்ள இரு வேட்பாளர் களின் வாக்குகளுடன் மற்றைய கட்சிகள் மூலம் கிடைக்கப் பெற்ற விருப்பு வாக்குகளும் சேர்க்கப்பட்டு

அதன் பின்னர் இரு வேட்பாளர் களின் கூட்டுத்தொகை யில் அறுதிப் பெரும்பான்மை பெற்ற வேட்பாளரை தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதியாக அறிவிக்கும்.

அவ்வாறு ஏனையோரின் விருப்பு வாக்குகளை சேர்த்தும் அறுதிப்பெரும் பான்மை கிடைக்காத சந்தர்ப்பத்தில் முதன்மை நிலையில் இரு வேட்பாளர்களின் வாக்குகள் கூட்டப் பட்டு அதன் மொத்த எண்ணிக்கை யில் 50% அதிகமாக பெற்ற வாக்காளர் ஜனாதிபதியாக அறிவிக்கப் படுவார்.

ஏதாவது ஒரு காரணத்தால் விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டு வாக்குகளின் எண்ணிக்கை சமமாக இருக்குமாயின், தேர்தல்கள் ஆணைக்குழு சீட்டுக் குலுக்கல் நடாத்தி வெற்றியாளரைத் தெரிவு செய்யும். இது முற்று முழுதாக தேர்தல் ஆணைக்குழு தமது விருப்பின் அடிப்படையில் நடாத்தும் விடயமாகும்.



# பங்களாதேஷில் வெடித்த பாரிய போராட்டத்தால் மூடப்பட்ட பாடசாலைகள் மீண்டும் திறப்பு

P.RUPAN






பங்களாதேஷில் (Bangladesh) 30 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு எதிராக போராட்டம் வெடித்த நிலையில் நாடு முழுவதும் பதற்றம் அதிகரித்ததால் கடந்த மாதம் 17ஆம் திகதி அங்குள்ள கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டன. இதையடுத்து பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகும் வரை போராட்டம் நடைபெறும் என அறிவித்து போராட்டத்தை போராட்டக்காரர்கள் தீவிரப்படுத்தினர்.

இந்நிலையில் மாணவர் போராட்டம் தீவிரமடைந்ததால் கடந்த 5ஆம் திகதி ஷேக் ஹசீனா பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறினார். இராணுவம் ஆட்சியை கைப்பற்றியதுடன், பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசும் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாட்டில் இயல்புநிலை மெல்ல மெல்ல திரும்பியதோடு, பாடசாலைகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களை மீண்டும் திறக்க இடைக்கால அரசு முடிவு செய்தது. அதன்படி 18ஆம் திகதி முதல் கல்வி நிறுவனங்களை திறக்குமாறு கடந்த 15ஆம் திகதி கல்வி அமைச்சகம் உத்தரவிட்டதோடு, ஒரு மாதத்துக்குப் பிறகு நாடு முழுவதும் நேற்று பாடசாலைகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் திறக்கப்பட்டன.

## தாய்லாந்து புதிய பிரதமர் பெடோங்டர்ன் ஷினவத்ராவுக்குப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து!

தாய்லாந்து நாட்டின் புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெடோங்டர்ன் ஷினவத்ராவுக்குப் இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். நாகரிகம், கலாசாரம் மற்றும் மக்களுக்கு இடையேயான இணைப்பு என்ற வலுவான அடித்தளத்தின் மீதான இந்தியா - தாய்லாந்துக்கு இடையேயான இருதரப்பு உறவுகளை



மேலும் வலுப்படுத்த உங்களுடன் இணைந்து பணியாற்றுவதை எதிர்பார்க்கின்றேன் என பெடோங்டர்ன் ஷினவத்ராவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். தாய்லாந்து நாட்டின் பிரதமராக இருந்தவர் ஸ்ரேதத்தா தவிசின் அரசியல் சாசனத்தை மீறி செயல்பட்டதாக அந்நாட்டு நீதிமன்றத்தால் அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதனையடுத்து தாய்லாந்தின் புதிய பிரதமராக 37 வயதாகும் பெடோங்டர்ன் ஷினவத்ரா, ஆளும்கட்சி எம்பிக்களால் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னாள் பிரதமர் தக்சின் ஷினாவத்ராவின் மகள்தான் பெடோங்டர்ன் ஷினவத்ரா. தாய்லாந்து நாட்டின் 2ஆவது பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இதற்கு முன்னதாக பெடோங்டர்ன் ஷினவத்ராவின் அத்தை அந்நாட்டின் பிரதமராக பதவி வகித்திருந்தார்.

தக்சின் ஷினவத்ரா, 2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டுவரை தாய்லாந்து பிரதமராக இருந்தார். அப்போது தக்சின் ஷினவத்ரா ஆட்சியை ராணுவம் கலைத்து அவரது கட்சிக்கும் தடை விதித்தது. இதனை யடுத்து தாய்லாந்து நாட்டை விட்டு தக்சின் தப்பி ஓடினார். அத்துடன் தாய்லாந்தில் புதிய அரசியல் கட்சியை யும் தொடங்கி செல்வாக்கு செலுத்தினார். வெளிநாட்டில் இருந்தபடியே தாய்லாந்து அரசியலில் செல்வாக்கு செலுத்தியதால் 2011ஆம் ஆண்டு தேர்தலில் தனது சகோதரியான யிங்லக் ஷினவத்ராவை பிரதமராக்கினார். ஆனால் 2014 ஆம் ஆண்டு ஊழல் குற்றச்சாட்டால் யிங்லக் பிரதமர் பதவியை பறிகொடுத்தார். இதனையடுத்து 2023ஆம் ஆண்டு தேர்தலிலும் தக்சின் ஷினவத்ரா கட்சி வென்று ஆட்சி அமைத்தது. இந்த ஆட்சியில் பிரதமராக இருந்த ஸ்ரேதத்தா தவிசின் நீதிமன்றத்தால் நீக்கம் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வெளிச்சம்

## சிறுகதை

திருமதி.ஜெனிதா மோகன் - மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் - கல்முனை



"அம்மா மேசைல வைச்ச மெழுகுதிரி எங்கே? வச்சா ஒரு இடத்துல இருக்காதே எங்கம்மா போய்ட்டு இருட்டுக்குள்ள ஒண்ணுமே தெரியலே" என்று கதைத்த படி மீனா வந்தாள். அங்க தான் புள்ள இருந்த நல்லா பாரு" என்று மீனாவின் அம்மா ராசாத்தி சொன்னாள். "ஆ ஆ" என்று கூறியபடியே வெளிச்சத்தை கொண்டு வந்தாள். அப்போது அந்த மண்டபத்தில் அம்மாவும் வந்தார். இருவரும் கொஞ்ச நேரம் ஓய்வெடுத்தனர். "அம்மா கொஞ்சம் நேரம் மடியில சாய்ந்து கொள்ளவா?" என்று கேட்டாள். "ஒனக்கு நேரம் கிடைக்கிறதே பெரிய விஷயம் கரண்ட் வரும் வரைக்குமாவது படுத்துக்கொள்" என தாய் சொன்னாள். தாயின் மடியில் தலை வைத்து மீனா தூங்கினாள். தாய் மீனாவின் தலையை தடவிக் கொண்டு பேச ஆரம்பித்தாள். அப்படியே சமூகம் சமூகம் என்று சமூகத்துக்காகவே வாழ்ந்தா கடைசி காலத்துல எனக்கு பிறகு உன்ன பார்க்கிற யார்? இந்த சமூகம் உன்ன பார்க்குமா? ஒனக்கு சிலை அமைக்கப் போறாங்களா? ஓய்வு இல்லாம ஏன் ஓடிக் கொண்டிருக்கா ஒனக்கென்று ஒரு குடும்பம் பிள்ளை குட்டி வந்து எப்ப வாழ போற என்று புலம்பி தீர்த்தாள். "இதே வேலையா போச்சு அம்மா அதெல்லாம் கடவுள் பார்த்துப்பார், தர்மம் தலைகாக்கும் தக்க சமயம் உயிர் காக்கும்" என்றாள் மீனா.

"முடிஞ்சவரை நான் மத்தவங்களுக்காக வாழ்ந்துட்டு போறேன் இந்தக் கதையை கதைக்காதீங்கம்மா நான் சமூகத்துக்காக படைக்கப்பட்டவள். என்னால முடிஞ்ச அளவுக்கு சமூகத்துக்கு செய்வேன் அதில் எனக்கு ஒரு திருப்தியம்மா, எல்லோரும் குடும்பத்துக்காகவும் புள்ள குட்டிக்காகவும் வாழ தொடங்கினால் சமூகத்துக்காக சேவை செய்ய யாரும் இல்லையே. உங்களுக்கே தெரியும் எத்தன தற்கொலைய தவிர்த்து இருக்கேன், எத்தன குடும்பத்த சேர்த்து வச்சிருக்கேன், எத்தனை பிள்ளைகளை பாதுகாத்திருக்கேன், எத்தனை பேர் மனச மாற்றி இருக்கேன், எத்தன பேரை வலுப்படுத்தி இருக்கேன், எத்தன பேரை தொழில் ரீதியாக முன்னேற்றி இருக்கேன், இத்தன பேருக்கு முன்னுதாரணமாக இருக்கேன். நான் வாழலைன்னாலும் என்னால எத்தன பேர் வாழ்ந்து கொண்டு இருக்காங்க. அம்மா அதை நினைச்சு பெருமைப் படுங்க". "உன்னோட கதைச்சு வெல்லலாமா, சரி, சரி சாப்பிட வா?" என்றாள் அம்மா.

மறுநாள் காலை மீனா வேலைக்கு செல்ல பரபரப்பாய் வெளிக்கிட்டுக் கொண்டிருந்தாள். " கொஞ்சம் பொறு மகள் இந்த இட்லியையும் அவிச்சி முடிச்சட்டன் சாப்பிட்டுப் போ..." என தாய் கூறியதும், "வேண்டாம் வேண்டாம்..." நான் ஒப்பீஸ் கன்ரீன்ல போய் சாப்பிடுறன்" என பூரித்த முகத்துடன் வெளியேறிய மீனாவை கண்டதும் தாய்க்கு ஏதோ ஒரு சந்தேகம். முன்பு போலில்லாமல் இப்போவெல்லாம் அவளின் நடத்தையில் மாற்றம் தெரிந்தது. சம்பளப் பணம் கொஞ்சம் குறைவாகத்தான் கொடுக்கிறாள். மாலை வீடு திரும்பும்போது தாமதமாக வருதல், எதையோ பார்க்கப் போகும் ஆவலில் ஓடுதல், வீட்டில் தங்குதல் குறைவு. இத்தனைக்கும் காரணத்தை இன்றே காண வேண்டுமென்று தாய் அவளது காரியாலயத்துக்கு சாப்பாடு எடுத்து செல்வதுபோல் சென்றாள். காரியாலயத்தில் காலை 10 மணிக்கு அவளைக் காண வில்லை. கூட வேலை புரிபவர்களை கேட்டதும் "மீனாவா....ஓ ...அவ இப்பல்லாம் எழில்ர வீட்டில்தான் நிற்பாவு...சாப்பாடும்; அங்கதான் அவனுடனே சாப்பிட்டு வருவாவு... காரியாலயத்திலிருந்து பக்கத்து தெருதான் நீங்கள் நடந்தே போகலாம்" என்று கூறியதும் தாய்க்கு தூக்கி வாரிப் போட்டது. இரவு இப்படியெல்லாம் கதைத்த மகளா இப்படி...? என தனக்குள் ஆயிரம் எண்ணங்களுடன் அவ் வீட்டை நோக்கி நடந்தாள்.

வீடு நெருங்கியது. அது ஒரு ஓலைக் குடிசை வீடு..., வாசலில் மகளின் செருப்பு கிடந்தது...மகள் அவள் இங்கேதான் இருக்கிறாள் என தாய்க்கு உறுதியானது. மகளின் சிரிப்பு சத்தமும் கேட்டது.

திடீரென உள்ளளே சென்று தாய் பார்த்தாள். மகள் தனது கைகளால் உணவை எழிலுக்கு ஊட்டிய வண்ணம் இருக்கிறாள். அவனும் அதை வாங்கி புசிக்கிறான். எழிலின் கோலத்தைக் கண்ட தாய் அதிர்ந்து போனாள். இரண்டு கைகளையும் விபத்தில் இழந்த எட்டு வயதுப் பையன். தாய் தந்தையற்ற அநாதை, எழுபது வயதான பாட்டியின் ஆதரவில் இருக்கும் அவனது விபத்து மீனாவின் கண் முன்னே இடம்பெற்றது. அவள் மனதை உறுத்தவே அன்றிலிருந்து அந்த வலது குறைந்த பையனை பராமரிக்கவே அவள் செலவும் செய்கிறாள். அவனுக்கு பாதுகாப்பாகவும் இருக்கிறாள். தனது மகளின் நடத்தை மாற்றத்தை கண்டு, தவறாக நினைத்த தாய் கூனிக் குறுகினாள். தாய் தன் மகளைக் கட்டியணைத்தாள், தன் மகளை மட்டுமல்ல பேரனையும் தான்.

சுபம்.

# Microsoft Outage Blue Screen

## விமானநிலையம், வங்கி, ஐடி நிறுவனங்கள் தவிப்பு காரணம் என்ன?

ICT UNIT - DIVISIONAL SECRETARIAT, NAVITHANVELI






ஜூன் 18ம் தேதி மாலை 6 மணி முதல் மத்திய அமெரிக்காவில் இந்தப் பிரச்சினை ஆரம்பமாகியிருக்கிறது. திடீரென Microsoft திரையில் Blue Screen தோன்றி கணினி இயங்காமல் அப்படியே நின்றுள்ளது. இதனால் அங்கிருக்கும் நிறுவனங்களின் கணினிகள் முடங்கியுள்ளன. இந்தப் பிரச்னை இன்று அமெரிக்காவின் மொத்தப் பகுதிகளிலும் பரவி இந்தியா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி எனப் பல நாடுகளில் இருக்கும் 'Microsoft' இயங்குமுறைமை கணினிகளைப் பாதித்துள்ளது.

இதனால் 'Microsoft' இயங்கு முறைமை கணினிகளைப் பிரதானமாகப் பயன் படுத்தும் பல ஐடி நிறுவனங்கள், வங்கிகள், மீடியா மற்றும் பொதுச் சேவை நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, விமான நிலையத்தில் போர்டிங் பாஸ் செக்கிங், விமானத்தைக் கண்காணிக்கும் சேவைகள் உள்ளிட்டவை பாதிப் படைந்துள்ளதால் விமானச் சேவைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

சில விமானச் சேவைகளில் பாதிப் பில்லை என்றாலும் கணினி செயல் படாததால் அங்கிருக்கும் விமான நிலைய அலுவலர்களே கைகளால் அனைத்தையும் எழுதி போர்டிங் விவரங்களை அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் பெரும் சிக்கல்களும், தாமதங்களும் ஏற்பட்டு வருகின்றன. இதனால் முக்கியப் பணிகளுக்கு விமானத்தில் செல்லும் பயணிகள் சிரமத்திற்குள்ளாகியிருக் கின்றனர். அதேபோல வங்கிகளிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த திடீர் 'Microsoft' ப்ளூ ஸ்கீரின் பிரச்னை குறித்த தெளிவான காரணம் ஏதும் இன்னும் கண்டறியப்படவில்லை. அமெரிக்காவின் 'CrowdStrike' என்ற சைபர் செக்யூரிட்டி மென்பொருள் தொடர்பான அப்டேட் ஒன்றினால் இது நிகழ்ந்திருக்கலாம் என்கின்றனர். அதனாலேயே சிஸ்டம் பூட் ஆகாமல் மீண்டும் மீண்டும் ரீ-ஸ்டார்ட் ஆகின்றது என்று தெரிவிக்கின்றனர். இந்த அப்டேட்டை மேற்கொள்ளாத எந்தச் சிக்கலும் நிகழவில்லை என்று தெரிவிக்கின்றனர்.இது குறித்து அந்த நிறுவனம் தீவிரமாக ஆராய்ச்சி செய்து வருகிறது. இப்போதைக்குத் தற்காலிகத் தீர்வாக மிகுந்த கவனத் துடன் DATA-களுக்கு சேதாரமின்றி கணினியை 'Boot' செய்யச் சொல்லி வலியுறுத்துகிறது அந்நிறுவனம். அப்படியும் இதே பிரச்னை நேர்ந்தால் இந்தப் பிரச்னை சரிசெய்யப்படும் வரை கணினியை ஆஃப் செய்து வைத்திருக்கும்படி அறிவுறுத்தியிருக் கிறது அந்நிறுவனம். இது சைபர் தாக்குதலாக இருக்கும் என்று அமெரிக்க அரசு தீவிர விசாரணையில் இறங்கி யுள்ளது. அமெரிக்க அரசின் முக்கியமான துறையைச் சேர்ந்த கணினிகள் ஹேக் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப் படுகிறது.

மைக்ரோசாப்டின் ஆதரவுடன் இணைந்து சிக்கலை விரைவாகவும் வெளிப்படை யாகவும் தீர்ப்பதில் CrowdStrike இன் அர்ப்பணிப்பு தொழில்நுட்ப சவால்களை சமாளிப்பதில் ஒத்துழைப்பின் முக்கியத்து வத்தை எடுத்துக்காட்டுகிறது. சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்ந்து உருவாகி வருவதால் சாத்தியமான அபாயங்களுக்கு வலுவான கூட்டாண்மை களைப் பேணுதல் மற்றும் அதிநவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துதல் அவசியம்.

முடிவில் எந்த அமைப்பும் செயலிழப் பிலிருந்து விடுபடவில்லை என்றாலும் வணிகங்கள் அவற்றின் தாக்கத்தைத் தணிக்கவும் தங்கள் டிஜிட்டல் சொத்துக்களுக்கான தொடர்ச்சியான பாதுகாப்பை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்கலாம்.

## தையல் இயந்திரம் வழங்கல் நிகழ்வு...

திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2024 ஆகஸ்ட் 01ஆந் திகதியன்று இடம் பெற்றது. இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.தி.கிருபைராஜா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அ. சர்மிலராஜ் ஆகியோரும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான தையல் இயந்திரங்களை வழங்கி வைத்ததுடன் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## தேசிய ஆக்கத்திறன் போட்டி...

வழிகாட்டலுக்கமைவாக நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார பிரிவின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான பிரதேச மட்டத்திலான ஆக்கத்திறன் போட்டிகள் 2024 ஆகஸ்ட் 04ஆந் திகதியன்று மத்தியமுகாம் - 01 கிராம அலுவலர் பிரிவிலுள்ள வேம்படி வாணி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றன. இதில் மாணவர்களுக்கான பேச்சு, நடனம், நீதிநூல் ஒப்புவித்தல், பண்ணிசை, கதாப்பிரசங்கம் ஆகிய போட்டிகள் இடம் பெற்றதுடன் மாணவர்கள் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர். இந்நிகழ்வில் பிரதேச செயலக கலாசார பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் நடுவர்களும் கலந்து கொண்டனர்.

## உழுந்து/பயறு பயிர்ச்செய்கை திட்டம்...

பாசிப்பயறு வழங்கி வைக்கும் நிகழ் வானவது 2024 ஜூலை 30ஆந் திகதியன்று நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.தி.கிருபைராஜா அவர்களின் தலைமையில் நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் இடம் பெற்றது. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான பாசிப்பயறு பொதிகளை குறித்த கிராம அலுவலர் பிரிவுகளுக்கான பொருளாதார அபிவிருத்தி உத்தி -யோகத்தர்கள் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர்.

## பயனாளிகளுக்கான ஆடுகள் வழங்கிவைப்பு...

பயனாளிகளுக்கான ஆடுகள் வழங்கி வைக்கும் நிகழ்வானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 25 ஜூலை 2024 ஆந் திகதி இடம் பெற்றது. மேலும் இந்நிகழ்வில் பிரதேச செயலக கணக்காளர் திரு. நிஸ்வி யாஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.தி.கிருபைராஜா ஆகியோரும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான ஆடுகளை வழங்கி வைத்தனர். பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மாகாண மட்டத்தில் சாதித்துவரும் நாணைமடு இந்துக்கல்லூரி



கிழக்கு மாகாணக் கல்வித் திணைக் களத்தினால் பாடசாலைக்களுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகளில் நாணைமடு இந்துக்கல்லூரி கபடி, எல்லே போட்டிகளில் தேசிய மட்டதிற்கு தெரிவாகியிருந்தனர். 17.07.2024ஆம் திகதி நடைபெற்ற பெண்களுக்கான 17 வயதுக்குட்பட்ட கபடிப்போட்டியில் இரண்டாம் இடத்தினை பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. 30.07.2024ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான எல்லே சுற்றுப்போட்டியில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர். இப்போட்டியில் முதலாவது சுற்றில் 19:4 என்ற வித்தியாசத்தில் தெகியத்த கண்டி மகாவித்தியாலயத்தை வெற்றி பெற்றனர். இரண்டாம் சுற்றில் முறக்கட்டாஞ்சேனை RKM பாடசாலை யுடன் 9:3 என்ற வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தனர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் அலியார் மகாவித்தியால யத்தை வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டியில் மண்டூர் விக்னேஸ்வரா வித்தியாலயத்துடன் தோல்வியுற்று, மூன்றாம் இடத்திற்கான போட்டியில் அல்ஹிருமா மகாவித்தியாலயத்தினை வெற்றி பெற்று தேசிய மட்டதிற்குத் தெரிவாகியிருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

## மாணவர்களுக்கான விசேட தொழில் வழிகாட்டல் பயிற்சி



நாடளாவிய ரீதியில் இம்முறை 2024 இல் உயர்தரம் எழுதிய மாணவர் களுக்கான விசேட தொழில் வழி காட்டல் நிகழ்ச்சி திட்டமானது தேசிய கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் கல்வி அமைச்சினால் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட மாணவர்ளுக்கு மதிப்பிக்குரிய நாவிதன்வெளி பிரதேச செயலாளரான திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பாடநெறியானது மார்ச் மாதம் 05ஆம் திகதி தொடங்கி மே மாதம் 05ஆம் திகதி முடிவடைகின்றது. சுமார் இரண்டு மாதங்களைக் கொண்ட இத்தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சியில் 42 மாணவர்கள் சிறப்பாக பங்குபற்றி பயிற்சியை பெற்று இப்பாடநெறியை பூர்த்தி செய்துள்ளனர். இவர்களுக்கான சான்றிதழ்கள் தேசியகல்வி நிறுவனத்தின் Director General (பணிப்பாளர்), Ministry of Education Secretary (செயலாளர்), Tertiary Vocational Education Commission – Director General (பணிப்பாளர்) ஆகிய உயர் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் களினால் ஒப்பம் இடப்பட்ட மிகப் பெறுமதி மிக்க சான்றிதழ்களாகும். இச் சான்றிதழ்களை வழங்கும் வைபவமானது நாவிதன்வெளி அன்னமலை பாடசாலை யின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பாடசாலை அதிபர், உப அதிபர் மற்றும் வளவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல.07 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பு | 2 த் | 3 த | 4 க | ம் | ■ | 5 பு | 6 ள் |
| 7 ரு | உ | வ | ம் | ■ | 8 இ | ள் | ரு |
| 9 வ | த | ம் | ன | ■ | ம் | ■ | ட் |
| 10 ம் | ர | ■ | ■ | 11 ளை | மி | 12 க் | ச |
| ■ | 13 வு | 14 ன | 15 க | ■ | ■ | 16 ஆ | ம் |
| 17 ல் | ■ | 18 ன | ட | ண் | 19 க | ம் | ■ |
| 20 க | 21 ரு | ம | ம் | ■ | 22 ம | க | 23 ம் |
| 24 வி | த | ம் | வா | ■ | ம் | ■ | ஓ |

**பாராட்டு பெறுவோர்**

*A.சுதர்சன்*
*வீரமுனை.*

# குறுக்கெழுத்துப் போட்டி இல.08

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | ■ | 3 |
| | ■ | ■ | ■ | | ■ | 4 | |
| 5 | 6 | | ■ | 7 | | | |
| 8 | | ■ | 9 | | ■ | 10 | |
| ■ | 11 | 12 | | ■ | 13 | | ■ |
| 14 | ■ | 15 | | 16 | | ■ | 17 |
| 18 | | | ■ | 19 | | | |
| | ■ | ■ | 20 | | | ■ | |

## இடமிருந்து வலம்

01. விதிமுறை என்றும் சொல்லலாம்.
04. மரம்.
05. அன்பின் ஒரு வகை.
07. இதுவும் ஒரு உபசரணைப் பொருள்தான்.
08. இது அமைவது தலைவிதிதான். (திரும்பி)
09. வரவேற்கவும் பயன்படுவது.
10. நாம் வாழும் தளம். (திரும்பி)
11. நீர்த்துளியோடு தொடர்புடையது.
13. முக்கியமான மந்திரம்.
15. இதற்கு ஒரு சுரப்பி உண்டாம். (குழம்பி)
18. ஒன்றைப் போல் இன்னொன்று.
19. ஒரு உணவுப் பண்டம்.
20. வேறுபாடு என்றும் கூறலாம்.

## மேலிருந்து கீழ்

01. ஒரு நாட்டின் தேசிய விலங்கு.
02. ஒவ்வொருவரும் கட்டாயம் செல்ல வேண்டிய இடம்.
03. ஒரு உலோகம்.
04. உபவாசம். (குழம்பி)
06. உயர் நிலையால் வருவது.
09. தோரணம் கட்ட பயன்படுவது. (குழம்பி)
12. விவசாயக் களம்.
13. ஒரு செயலை ஆராய்ந்து, அறிந்து முடிக்கும் துணிவு.
14. ஆள் என்றும் சொல்லலாம்.
16. பெண்ணின் பருவத்தில் ஒன்று. (குழம்பி)
17. இது ஒரு வகை நாண்.

**இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2024.09.15 ஆம் திகதி பி.ப.4.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.**

RELOAD
முதலாம் பரிசு : 200/=
இரண்டாம் பரிசு : 150/=
மூன்றாம் பரிசு : 100/=

## அன்னமலை சிறார்கள் நாம்



செந்நெல் பொழியும் திருவும் நிறைய
பணமும் பாலும் பொழியும்
கல்வியும் புகழும் பரவும்
ஓர் அழகிய கிராமமே
அன்னமலை கிராமம்
ஆட்டுக்குட்டி போல் துள்ளித் துள்ளித் திரிவதே
எமது அன்னமலை கிராமத்தில்
வசிக்கும் சிறார்கள்

காலையில் பூக்கும் பூக்கள் போல்
அன்னமலை கிராமத்தின் உடல் வீரமும்
உள்ளத்தில் வலிமையும் பெற்று
என்றென்றும் உட்சாகத்துடன்
வாழ வேண்டும்
எமது அன்னமலை சிறார்கள்

சிறுவயதிலிருந்தே பல இலட்சியங்களுடன்
பல கனவுகளையும் கொண்டு
குறித்த இலக்கை அடைய
பல சவால்களுடனும் போராடி
பாடசாலை செல்கின்றனர்
அன்னமலை சிறார்கள்

அன்னமலை சிறார்களின் கல்வி சிறக்கவும்
அறிவு ஓங்கவும் எல்லாம் வல்ல
அன்னமலை குல விளக்காய்
அருள் புரியும்
ஸ்ரீ வடபத்திர காளி அம்பாள்
அருள் புரிய வேண்டும்.

சக்தி சிறுவர் கழகம்
அன்னமலை -01

## கல்வி


கல்லாய் இருக்கும் நம்மை
சிலையாக மாற்றுவது கல்வி

காற்று இல்லை என்றால் உயிர் இல்லை
கல்வி இல்லை என்றால் வாழ்க்கை இல்லை

கல்வியே நீ அந்த அறிவின் ஊற்றோ!
கடலின் ஆழமோ கருமேகத்தின் மழையோ!
இமயத்தின் உயரமோ!

உன்னை நினைக்கும் போது
மனதில் ஊற்று எடுப்பது கூட
உன்னை பருகியதாலோ?

*M.F. Zeefath Ahamed*
*Chalambaikeni -01*





## மாணவர் ஆக்கம்

M.G.F.SHAHIKKA - SORIKALMUNAI -01



# Why must we pay attention to learning artificial intelligence?

By: Mr. B. Sajindren




In the rapidly evolving landscape of the 21st century, few fields hold as much transformative potential as artificial intelligence (AI). As AI technologies continue to advance, their impact on society becomes increasingly profound. From enhancing productivity and inno - vation to influencing ethical and socio-economic structures, under-standing AI is crucial for individuals and communities alike. Let's explore the importance of learning about artificial intelligence, highlighting its role in shaping the future of technology, the economy and our life style.

AI is at the forefront of techno - logical innovation, driving advance - ments across various domains. Machine learning algorithms, neural networks and natural language processing have revolutionized fields such as healthcare, finance, and transportation. For instance, AI-powered diagnostic equipment can analyze medical images with high accuracy, potentially leading to earlier and more accurate detection of diseases. Autonomous vehicles, equipped with AI systems, promise to enhance road safety and reduce traffic congestion. Understanding these technologies is essential for individuals and businesses to harn - ess their potential, stay competitive and contribute to the development of cutting-edge solutions.

The integration of AI into indus tries has significant implications for the global economy. AI-driven automation is transforming traditi - onal job roles and creating new opportunities in tech-related fields. While automation can lead to job displacement, it also fosters the emergence of new job categories - and demands for skills in AI development, data analysis and ethical governance. Learning about AI equips individuals with the knowledge to navigate these chan - ges, adapt to new career paths and engage in lifelong learning. More - over, understanding AI helps policymakers and business leaders make informed decisions about workforce development and econ - omic strategies.

AI technology raises important ethical questions related to privacy, bias and decision-making. The deployment of AI systems in sensi - tive areas, such as criminal justice and hiring practices, requires careful consideration of fairness and accoun -tability. Algorithms that dri -ve these systems can inadver tently perpetuate existing biases or make decisions that lack transparency. Educating oneself about AI helps individuals and communities eng - age in critical discussions about the ethical implications of AI techno - logies. This knowledge fosters a more informed citizenry that can advocate for responsible AI develop -ment and implementation.

Learning about AI also nurtures problem-solving skills and creati - vity. The process of understanding AI involves dissecting complex algorithms, exploring data-driven insights and developing innovative solutions. Engaging with AI techno - logies encourages a mind set of experimentation and critical thin - king. As AI systems become more integrated into everyday life, having a grasp of how they work empowers individuals to leverage these tools for creative and practical appli - cations, from developing new business ideas to addressing societal challenges.

AI is a field characterized by rapid change and continuous evolution. New breakthroughs and applications emerge regularly, shaping the future trajectory of technology and its role in society. Staying informed about AI trends and advancements is essential for antici - pating future developments and their potential impacts. Education in AI prepares individuals to adapt to future technologies, participate in shaping their applications and contribute to discussions about their ethical and societal implications.

Not anybody can deny the impor - tance of learning about artificial intelligence at present time. As AI continues to influence various aspects of life, from technological innovation and economic shifts to ethical consider - ations and creative problem solving, understanding its principles and appli - cations becomes increasingly vital. By educating ourselves about AI, we not only prepare for a future shaped by these technologies but also ensure that we can actively participate in the discourse surrounding their development and imp -lementation. Embracing AI education is essential for fostering a knowled - geable, adaptive and ethical society that can navigate the complex -ities of the digital age and harness the full potential of artificial intelligence.

# காணிக்கச்சேரி நிகழ்ச்சியின் மூலம் உங்களுக்கு கிடைக்கும் பலன்கள்

NMM A. Sujan - Colonization Officer



கடந்த மாத இதழின் தொடர்ச்சி...



3.4 **அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஏனைய சட்ட ஆவணங்கள் பின்வருமாறு:**

1. நீண்டகால குத்தகை உறுதி (அரச காணிகள் கட்டளைச் சட்டம்)
2. கொடுப்பனவு பத்திரம் (பிரதான ஆவணம்/ காணி உறுதி) இவை காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும். (இவை சுவர்ண பூமி/ ஜய பூமி/ ரத்ன பூமி/ இசுருபூமி/ ரன்பிம என காலத்திற்கு காலம் பல்வேறு பெயர்களில் வழங்கப்படும்).
3. சுதந்திர கொடுப்பனவு பத்திரம் (அரசகாணிகள் கட்டளைச் சட்டத்தின்கீழ்)
4. நியாதன சாதன பத்திரம் (காணி பிரதான விசேட ஏற்பாடுகள் சட்டத்தின்கீழ்)
5. உரிமைப்பத்திரம் (உரிமை பதிவு செய்தல் சட்டத்தின்கீழ்)
6. சமூக உறுதி (விகாரைகளுக்காக அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின்கீழ்)
7. அனுபவித்தல் உத்தரவு (அரசாங் கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் மாகாண உள்ளுராட்சி நிறுவனங் களுக்காக)

## சரியான பாதையில் சென்றால்...

சிவராமன் கடும் சிக்கல் ஒன்றை எதிர்நோக்கியுள்ளார். வங்கியில் அடகு வைத்த காணி மூழ்கப் போகின்றது. அவ்வாறு நடக்குமாயின் தற்போது சிவராமனும் அவரது மனைவி, பிள்ளைகளும் வசிக்கும் வீடும் அவர்களது கையில் இருந்து நழுவிப் போகும். வாடகை வீட்டில் வசிக்கப் போகின்றோம் என நினைக்கும் போது நெஞ்சு அடைப்பதுபோல் இருப்பதாக சிவராமன் உணருகின்றார். தான் சமூகத்தில் வாழும் முறைக்கு, இத்தனை வசதியுடனான வீட்டினை விட்டுச் செல்வது, தமக்கு எவ்வாறாயினும், தமது பிள்ளைகளினால் ஒருபோதும் தாங்கிக்கொள்ள முடியாது என்பதனை சிவராமன் அறிந்து வைத்திருந்தார். சிவராமன் கடந்த காலத்தை நினைத்துப் பார்த்தார். தாம் இந்த காணியை விலைக்கு பெற்ற விதம் குறித்தும், அதற்கான காணி உறுதியை பெற்றுக் கொள்வதற்கு பிரதேச செயலகத்திற்கு சென்ற விதம் குறித்தும் அவருக்கு நினைவுக்கு வந்தது.

பிரதேசத்தில் அனைவராலும் நன்கு அறியப்பட்டவாரன சிவராமன், பிரதேச செயலகத்திற்குச் சென்ற போது, அங்குள்ளவர்கள் தமது தேவையை உடனடியாக செய்து தருவதற்கு எடுத்த முயற்சி நினைவுக்கு வந்தது. அரசாங்கத்தின் ஊதியம் பெறும், பொருளாதார ரீதியாக வலுவான நிலையில் இருக்கும் தமக்கு அதிகாரிகள் ஒன்றிணைந்து ஜயபூமி காணி உறுதியை தயாரித்து கொடுத்தமையும் நினைவுக்கு வந்தது. தமது வருமானத்திற்கு அமைய அந்தகாணி உறுதியைப் பெறுவதற்கு அவருக்கு தகுதி இல்லை என்பதும், ஜயபூமி காணி உறுதி வருமானம் குறைந்தவர்களுக்கு வழங்கப்படுவது என்பது குறித்தும், அவர் அறிந்திருக்கவில்லை.

அதிகாரிகளும் அவருக்கு தெளிவு படுத்தவில்லை. எனினும், தமது தகுதிக்கு அமைய அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின்கீழ் காணி பெறுவதற்கு அதிககாலம் செல்லும் எனத் தெரிவித்தமையினால், வரி செலுத்துமாறு தெரிவித்தமையினால் ஜயபூமி காணியைப் பெறுவதற்குதாம் விருப்பம் தெரிவித்தமையும் திரைப் படம்போல் அவரது கண் முன்னால் விரிந்தது. எனினும், தற்போது சிவராமன் எதிர்நோக்கியுள்ள பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பது குறித்து குழப்பமடைந்துள்ளார். ஆலோசனை பெறுவதற்கும், தமக்கு காணி உறுதியை தயாரித்து தந்த அதிகாரிகள் பிரதேச செயலகத்தில் கடமையில் இல்லை. ஜயபூமி காணி உறுதி கிடைத்தவுடன், அதனை வங்கியில் அடகு வைத்து, குறித்த காணியில் பாரிய வீடொன்றை கட்டினார். அதில் ஒரு பகுதியில் வசித்த அதே சந்தர்ப்பத்தில், சுற்றுலா விடுதியொன்றாக மற்றைய பகுதியை பயன்படுத்தி வந்தார்.

தகவல் மூலம் - டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெசனல் - ஸ்ரீலங்கா

# கிராம மக்களின் வாழ்வும் வளமும்

செல்வசிகாமணி (ஓய்வுநிலை அதிபர்)- சென்றல்கேம்ப்



கடந்த மாத இதழின் தொடர்ச்சி...





எல்லோரும் ஒன்றுதான். அதுதான் எங்கள் கிராமத்து தாய்மார்களின் சிறப்பு. எமது மக்களின் வீடுகளில் பல்வகையான நிகழ்வுகள் இடம் பெறுவதுண்டு. ஒன்று பகலில் அம்மாள் பூசை இரவு பைரவர் பூசை. அம்மாள் பூசையையும் பெரிய அளவில் பொங்கல் செய்தும் இரவில் பைரவர் பூசையையும் அவ்வாறே செய்தும் பிரசாதங்களை வீடு வீடாகச் சென்று உறவினர்களுக்கும் அயலவர்களுக்கும் பரிமாறுவார்கள். இப்பூசைகள் செயற்பாடுகளில் வீட்டாரின் உறவினர்கள் பெரும்பாலும் கலந்துகொள்வதைக் காணலாம். அது போன்று இல்லங்களில் நடைபெறும் பெண்பிள்ளைகளின் நீராட்டுவிழா, திருமணவிழா எதுவாயினும் உறவினர்கள் அனைவரும் முன்கூட்டியே வீட்டிற்கு வந்து அனைத்து வேலைகளையும் தடையின்றி செய்து கொடுப்பதும் முடியும்வரை தோளோடு தோளாக உதவிபுரிவதும் எமது கிராம மக்களின் மற்றுமொரு சிறப்பாகும். இவ்விழாக்களில் தினமும் விழா நடைபெறும் வீட்டில் தொடர்ச்சியாக உணவு வழங்கப்பட்டுக் கொண்டே இருக்கும். விழாவிற்கு வரும் விருந்தினர்கள் காலை மாலை இரவு பகல் எவ்வேளையில் வந்தாலும் அவர்களுக்கு உணவு வழங்கப்படும். அதுதான் எங்கள் கிராம மக்களின் பண்பாடு.

இப்போது இன்னும் ஒரு இடத்திற்கு நாம் செல்லலாம். கிராமமக்கள் எப்படி ஒரு விருந்தினரை உபசரிக்கிறார்கள் என்று பார்ப்போம். எங்கள் கிராம வீடுகளுக்கு விருந்தினர் ஒருவர் வந்தால் அவருக்கு புதிய பாய் போட்டு அமரச் செய்வார்கள். இதுதான் ஆரம்பகால வழக்கமாகும். (பாய் எப்படி வருகின்றது என்ற கதையைப் பின்னர் கூறுகின்றேன்). சரி அமரச்செய்த விருந்தினருக்கு தாகமாக இருக்கலாமல்லவா? முதலில் ஏதாவது பருகக் கொடுக்க வேண்டுமே அதற்காகத் தங்கள் வளவில் அல்லது தோட்டத்தில் உள்ள தென்னை மரங்களில் இளநீர் பறித்துவந்து வெட்டிக்கொடுப்பர். இல்லையெனில் எலுமிச்சைக்காயைப்பறித்து பிழிந்து சாறுகலந்து பருகக் கொடுப்பர்.

இனி எமது கிராம மக்களின் தொழில்களும் வருமானமும் தொடர்பான தகவல்களை அன்பர்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். எமது கிராம மக்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். சிறியவர்கள் முதல் பெரியவர்கள் அனைவருமே சோம்பல் தெரியாதவர்கள். பாரதியின் 'சோம்பல் தவிர்' என்ற வாசகம் இவர்களுக்கே மிகவும் பொருத்தமானது. ஏந்த வேலையிலும் பின்நிற்க மாட்டார்கள். தேவையாயின் உரசிப்பார்க்கலாம். சரி இனி நாம் தொழில்கள் தொடர்பாகப் பார்க்கலாம்.

கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றப்பட்டவர்கள், நெற்காணிகளையும் மேட்டுக் காணிகளையும் கொண்டவர்கள் என்பதனால் அவர்களின் பிரதான தொழில் நெற்செய்கையும் மேட்டுக் காணிகளில் மரக்கறிப் பயிர்ச் செய்கை மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கையுமாகும்.

அவற்றுடன் இன்னுமொரு பயிர்ச் செய்கையும் இங்கு காணப்பட்டது. அது எமது மக்களுக்கு பெரிய வருமானத்தை ஈட்டித்தந்த தொழிலான சிகரெட் புகையிலைப் பயிர்ச் செய்கையாகும். இதன்மூலம் எமது மக்கள் மிகுந்த நன்மையடைந்தனர். இத்தொழில் 4ஆம் கிராமம், 11ஆம் கிராமம், 15ஆம் கிராமம் போன்ற கிராமங்களிலே பிரபலமாகக் காணப்பட்டது. துரதிஸ்டவசமாக வன்செயல்களில் சில கயவர்களின் செயல்களால் அந்தத் தொழிலுக்கும் அதனால் வாழ்ந்து வந்த மக்களுக்கும் அதிகமான கூலித்தொழில் புரிவோருக்கும் பாதிப்பு ஏற்பட்டதோடு அந்தத் தொழிலும் இல்லாமல் போனது கவலைக்குரிய விடயமாகும்.

அப்படியானால் காணி பூமி இல்லாதவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கேட்கிறீர்களா? ஐயா, எங்கள் கிராமங்களில் எவ்வயதினருக்கும் எக்காலத்திலும் தொழில் செய்து வருமானம் ஈட்டக் கூடிய பலவழிகள் உள்ளன.

தொடர்ந்து சந்திப்போம்...

# கர்ப்பகால குருதிச்சோகையும் (*Anemia in Pregnancy*) அதனை வெற்றி கொள்ளும் வழிமுறைகளும்.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் - நாவிதன்வெளி.




குருதிச்சோகை என்பது குருதியில் காணப்படும் சிவப்பு இரத்த அணுக் களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படுதல் அல்லது அதன் தொழிற் பாட்டில் குறைபாடு ஏற்படுதல் ஆகும். இதனால் உடலின் இழையங் களுக்கு போதுமான ஒக்சிசனை விநியோகிப்பதில் குறைவு ஏற்படு -கின்றது.

கர்ப்பகால குருதிச்சோகையானது ஒரு குறிப்பிடத்தக்க உலகளாவிய பிரச்சினையாகும். குறிப்பாக வளர்ச்சி யடைந்துவரும் எம்போன்ற நாடுகளில் இது பெரும் சுகாதாரப் பிரச்சினையாக கர்ப்பிணித் தாய்மார்கள் மத்தியில் காணப்படுகின்றது.

ஒரு கர்ப்பிணித்தாய்க்கு இரத்தச்சோகை நோய் ஏற்படுவதற்கு ஊட்டச்சத்துக் குறைபாடு (முக்கியமாக இரும்புச்சத்துக் குறைபாடு) மிகவும் பொதுவான காரணமாகும். அது எமது நாட்டில் 31.8 சதவீதமாகும் (MRI Survey 2015), எனினும் எமது பிரதேசத்தில் அது 33 சதவீதமாகக் காணப்படுகின்றது.

எனினும் வேறுபல காரணங்களினாலும் குருதிச்சோகை நோயானது ஒரு கர்ப்பிணித்தாய்க்கு ஏற்படலாம். ஹீமோகுளோபினோபதி, ஹீமோலிஸிஸ், மற்றும் என்புமச்சை பாதிப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கற்பகால அளவிற்கும் ஈமோகுளோபின் அளவிற்கும் ஏற்ப குருதிச்சோகை வகைப்படுத்தப் படுகின்றது.

**முதல் 3 மாதகாலத்திற்கு.**

* 11g/dl விட கூடியதாக இருக்க வேண்டும்.
* 11 - 7g/dl - மிதமான குருதிச்சோகை
* 7g/dl விட குறையுமாயின் தீவிர குருதிச்சோகை எனப்படும்.

***4ம் மாதம் தொடக்கம் பிள்ளைப் பேறுவரை.***

* 10.5g/dl விட கூடியதாக இருக்க வேண்டும்.
* 7-10.5g/dl மிதமான குருதிச்சோகை.
* 7g/dl விட குறையுமாயின் தீவிர குருதிச்சோகை எனப்படும்.

பொதுவாக கர்ப்பகாலத்தில் குருதிச் சோகை ஏற்படுவதற்கான காரணங்கள் சிசுவின் வளர்ச்சி மற்றும் பிள்ளைப் பேறின் பின்னர் தாய்ப் பாலைச் சுரப்பதற்காக இரும்புச்சத்தை சேமித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக இரும்புச் சத்தின் தேவை அதிகரித்தல்.

*பிழையான உணவுப்பழக்க வழக்கம்.
*அதிகளவு காபோகைதரட் உணவுகளை உட்கொள்ளுதல்.
*வாந்தியின் காரணமாக இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ளாமை.
*இரும்புச்சத்து அகத்துறிஞ்சப்படுவதைத் தடுக்கும் செயற்பாடுகள் பற்றி அறிந்திராமை.
* பச்சை இலைக் கறிவகையோடு விற்றமின் C (அதாவது தேசிப்புளி) சேர்க்காமை.
* கர்ப்ப காலத்தின்போது இரும்புச் சத்து அகத்துறுஞ்சல் வீதம் மற்றைய காலங்களிலும் பார்க்க குறைவடைதல்.
* குடல்புழுத்தொற்று காரணமாக இரத்தத்திலுள்ள செவ்வணுக்களை இழத்தல்.
* இளவயது கர்ப்பம்.
* இரட்டைக் கர்ப்பம்.
* அதிபரவாந்தி.
* போதியளவு இடைவெளியற்ற கர்ப்பம்.
* குதவிரிநாளம் (பைல்ஸ்)

**குருதிச்சோகை நோய்க்கான குணங்குறிக -ளாக பின்வருவனற்றை குறிப்பிடலாம்.**

* உள்ளங்கை வெளிரிக் காணப்படல்
* கண்ணின் சீதமென்சவ்வு வெளிறிக் காணப்படல்
* களைப்பு, பலவீனம்
* நெஞ்சுப் படபடப்பு
* மூச்செடுப்பதில் சிரமம்
* தலைவலி
* நாடித்துடிப்பு உயர்ந்து காணப்படல் உதட்டு வெடிப்பு

பின்வரும் ஆய்வு கூட பரிசோதனை மூலம் குருதிச்சோகயை அடையாளம் காணமுடியும்

* **FBC (Full Blood Count)**
* **Blood Picture**
* **Serum Ferritin**

**குருதிச்சோகை நோயினால் தாய்க்கு ஏற்படும் சிக்கல்கள்.**

* தாயின் பொதுவான உடல்நிலை பாதிக்கப்படல், இலகுவில் களைப் படைதல்.
* இலகுவில் தொற்றுக்குள்ளாகும் நிலை ஏற்படுதல்.
* கருச்சிதைவு ஏற்படுல். (Abortion).
* முதிராக் குழந்தைப்பேறு. (Preterm birth).
* சிசுக்கு கருப்பையில் வளர்ச்சி தடங்கல் ஏற்படல். (IUGR).
* குருதிச்சோகை நோயினால் சிசுவிற்க்கு ஏற்படும் சிக்கல்கள் முதிராக் குழந்தை.

தொடரும்...



# கோழிக்கறி மற்றும் பழுப்பு அரிசி கார சூப்

## 2 நபர்களுக்குப் பரிமாறக்கூடிய அளவு

**தயாரிக்கும் நேரம்:** 10 நிமிடங்கள்
**சமைக்கும் நேரம்:** 20 நிமிடங்கள்

**தேவையான பொருட்கள்:**

* 1கோப்பை (200 கிராம்) சமைத்த பழுப்பு அரிசி.
* 2 மேசைக்கரண்டி சிகப்பு கறிபேஸ்ட்.
* 100 ml குறைந்த கொழுப்புள்ள தேங்காய்ப்பால்.
* 100 ml குறைந்த கொழுப்புள்ள பால்.
* 100 ml தண்ணீர்.
* 1 வெங்காயம் நான்காக வெட்டவும்.
* 1 கட்டை விரல் அளவு நறுக்கிய இஞ்சி.
* 1 பச்சை குடைமிளகாய் பெரிதாக வெட்டவும்.
* 1 நறுக்கிய கேரட்.
* 2 சரிபாதியாக வெட்டப்பட்ட தக்காளி
* 200 கிராம் கொழுப்பற்ற கோழி
* 3 மேசைக்கரண்டி பெரிதாக நறுக்கப்பட்ட
* பச்சைக் கொத்தமல்லி தழை
* 1 மேசைக்கரண்டி உலர்ந்த கொத்தமல்லி விதை
* 3 நறுக்கிய காப்பிர் எலுமிச்சை இலைகள்

**செய்யும் முறை :**

**1.** சூடான பாத்திரத்தில், கறி பேஸ்ட், வெங்காயம் மற்றும் இஞ்சி சேர்த்து, 1 நிமிடத்திற்கு வறுக்கவும்.

**2.** கோழித்துண்டுகள், காய்கறிகள், தேங்காய்ப்பால், பால் மற்றும் தண்ணீரைப் பாத்திரத்தில் சேர்க்கவும். நன்றாக் கலந்து, கொதிக்க விடவும்.

**3.** குறைவான வெப்பத்தில் 10-15 நிமிடங்களுக்கு வேக வைக்கவும், அல்லது கோழி முழுமையாக வேகும் வரையில் மற்றும் காய்கறிகள் நன்றாக வதங்கும் வரையில் சமைக்கவும்.

**4.** பிறகு பாத்திரத்தில் சாதம், கொத்தமல்லி மற்றும் எலுமிச்சை இலைகளைச் சேர்த்து, குறைவான வெப்பத்தில் 2 நிமிடங்களுக்கு வேக வைக்கவும்.


**5.** சூடாக பரிமாறவும்.

புரதம்
கால்சியம்

இ.றூபிகா - அபிவிருத்தி உத்தியோகத்தர்

# ரோங்கோல் தொடர்புகளும் சீரழியும் குடும்ப வாழ்க்கையும்

Mrs.K.Santhirakumar ,Counselling Officer - Divisional Secretariat, Kalmunai - North




அறிவியல் மற்றும் தொழினுட்பத்தின் ஒவ்வொரு வளர்ச்சியும் மனித வாழ்க்கையை இலகுபடுத்துகின்ற அதேவேளை பல பயங்கரமான பாதக விளைவுகளையும் தனிமனித, குடும்ப வாழ்க்கையில் ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றது. இன்றைய காலகட்டத்தில் அனைவரின் கைகளிலும் தவழ்ந்து கொண்டிருக்கிற மொபைல் போன்கள் அதனை பயன்படுத்துவதனைப் பொறுத்து சிலர் வாழ்க்கையில் முன்னேற, பலர் தவறான வழியில் பயன்படுத்துவதனால் தனிமனித, குடும்ப கட்டமைப்பில் ஏற்படும் மாற்றமானது சமூக சீரழிவுக்கு வழிவகுப்பதனையும் காணலாம். நம் அன்றாட வாழ்வில் மொபைல் போன்கள் இன்றியமையாதொரு பொழுதுபோக்கு கருவியாக மாறி விட்டது. நண்பர்கள், உறவினர்களுடன் உரையாடுவதில் தொடங்கி நொடிக்குநொடி செய்திகளை அறிந்து கொள்வதற்கும் பிள்ளைகளை மகிழ்வூட்டுவதற்குமான சாதனமாக மாறிவிட்டது. ஒவ்வொருவரின் கைகளில் உள்ள மொபைல் போன்களே அவர்களை வழிநடத்தி செல்கிறது என்று சொல்லு மளவுக்கு முக்கியமான தொரு விடயமாக மாறிவிட்டது.

குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள் ஆளுக்கொரு பக்கமாக போன்களுடனே பொழுதை கழிக்கின்றனர். இது குடும்பத்தில் ஆளிடை உறவில் இடைவெளியை ஏற்படுத்தி முரண்பாடு களுக்கு வழிவகுத்து விடுகின்றது. மொபைல் போனில் அதிகமாக நேரத்தை செலவழிக்கும் போது அப்பப்போ ரோங் கோல்களும் வருவதுண்டு.

நாம் அவ்வழைப்புகளுக்கு பதிலளித் தோமானால் வாழ்க்கையில் எந்த இலட்சியமும் இல்லாதவர்கள் தங்களின் பொழுது போக்குக்காகவும் தமது தேவையை நிறைவேற்றிக் கொள்வ தற்காகவும் தொடர்ந்து நமக்கு அழைப்பை ஏற்படுத்தியோ குறுஞ் செய்திகளையோ அனுப்பிக் கொண்டிருப் பார்கள். அத்துடன் உணர்வு பூர்வமாக வசீகர பேச்சினால் நம்மை மயக்கி வசப்படுத்தி விடுவார்கள். இது நாளடைவில் காதலாக மாறிவிடுகின்றது. எதிர் முனையில் இருப்பவர் என்ன சாதி, மதம், இனம், வயது, ஏற்கெனவே திருமணம் செய்தவரா? செய்யாதவரா? நல்லவரா? கெட்டவரா? தொழில் செய்பவரா? செய்யாதவரா? என்பதை யெல்லாம் பாராமல் இருவருக்குமிடையே இனம் புரியாததொரு காதல் உணர்வு ஏற்பட்டு விடுகின்றது. இதனால் பெற்றோர் பிள்ளைகள் இடையேயும், கணவன் மனைவியிடையேயும் முரண் பாடுகளும், பிளவுகளும் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றது.

ரோங்கோல் இனணப்புகளில் மாணவர் களும் சிக்கி கல்வியில் ஆர்வத்தினை இழக்கின்றனர். படிக்கும் வயதில் ரோங்கோல்களுக்கு அடிமையாகி தமது எதிர்காலத்தை தொலைப்பதுடன் பொருத்தமில்லாத நபருடன் தொடர்பை ஏற்படுத்தி இளவயது கர்ப்பத்திற்கும் தற்கொலைகளுக்கும் ஆளாகி தங்களின் வாழ்க்கையை தாங்களே அழித்துக் கொள்வதுடன் குடும்பத்தினருக்கும் மாறாத வடுவையும் ஏற்படுத்தி விடுகிறனர். அண்மையில் எங்களுக்கு



வந்த சம்பவமொன்று நாற்பத்தைந்து வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை பதினெட்டு வயதுடைய ஒரு சிறுமியுடன் தொடர்பினை ஏற்படுத்தி ஒரு வருடமாக காதலித்து வந்துள்ளார். திருமணம் செய்வதற்கென்று வந்த போதுதான் பெற்றோருக்கு இவர்களது விடயம் தெரிய வந்தது. அவர்கள் தடுக்க முயற்சி செய்தபோதும் முயாததால் சம்பந்தப்பட்ட உத்யோகத்தர் களுக்கு அறிவித்துள்ளனர். உத்தியோ கத்தர்கள் மனிதாபிமான அடிப்படையில் செயற்பட்டு அப்பிள்ளையின் வாழ்க்கை யை காப்பாற்றியுள்ளனர்.

எத்தனையோ குடும்பங்களில் கணவன் மனைவி ரோங்கோல் இணைப்பை பேணுவதால் முரண்பாடுகளும் ஆளிடை உறவில் இடைவெளிகளும் ஏற்படுவதனால் தவறான பாலியல் உறவுகளுக்கும் வழிவகுத்து குடும்பத் தினையும் சமூகத்தினையும் சீரழிப் பதனை நம் கண்கூடாக காணலாம். எத்தனையோ சிறப்பாக வாழ்ந்த குடும்பங்கள் இந்த ரோங்கோல் இணைப்பின் மூலம் சீரழிந்து பிள்ளை களின் எதிர்காலமும் கேள்விக்குறியாக மாறிவருகின்றது. மற்றும் எங்களுக்கு வருகின்ற குடும்ப பிரச்சினைகளில் 90 வீதமானவை ரோங்கோல் தொடர்பு களின் மூலம் காதலித்து திருமணம் செய்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

எனவே கையடக்க தொலைபேசி பாவனை எவ்வளவு அத்தியாவசியமாக இருக்கின்றதோ அதைவிட அதிகளவு தனிமனித, குடும்ப, சமூக சீரழிவு களையும் ஏற்படுத்தி வருவதனை காணலாம். மற்றும் புற்றுநோய், பார்வையிழப்பு, கேட்டல் குறைபாடுகள், சிந்தனை ஆற்றலும் ஞாபகசக்தியும் குறைவடைதல், இளவயதிலேயே உடல், உள நோயாளியாகவும் மாறி வருகின்றனர் என்பதும் யதார்த்தமான உண்மையாகும்.

# சித்த மருத்துவம்

கி.யோகலிங்கம் - பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்





சித்த மருத்துவம் என்பது தென்னிந்திய தமிழ் மருத்துவ முறையாகும். பண்டைய சித்தர்கள் இதனை தங்கள் அனுபவ அறிவால் நன்குணர்ந்து மிகவும் துல்லியமாக கூறியுள்ளனர். சித்த மருத்துவம் எப்போது தோன்றியது என்று வரையறுத்துக் கூறமுடியாது அது பாரம்பரிய மரபு முறைப்படி பரவி வந்துள்ளது. இயற்கையில் கிடைக்கக்கூடிய எண்ணற்ற புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, காய், கனி, வித்து முதலிய மூலிகைப் பொருட்களைக் கொண்டும் நவரத்தினம், நவலோகங்கள், இரசம், கந்தகம், கற்பூரம், தாரம், அயம், பவளம் முதலிய தாதுப் பொருட்களைக் கொண்டும் சங்கு, பலகணை, நண்டு முதலிய சீவப் பொருட்களைக் கொண்டும் திரிகடுகு, திரிசாரி, திரிபலை, பஸ்பம், செந்தூரம், மாத்திரை, கட்டுகள், பொடிகள், குளித்தைலங்கள், கஷாயங்கள் முதலிய பல பிரிவு வகைகளாக வியாதிகளுக்கு நல்ல தண்ணீர், கடல் நீர், ஊற்று நீர், கிணற்று நீர் முதலிய பல நீர் வகைகளை கொண்டும் பால், தேன், சீனி, நெய் முதலியவற்றை கொண்டும் தெங்கு, புங்கு, புன்னை, வேம்பு, எள் முதலிய தாவர எண்ணை வகைகளைக் கொண்டும் உருவாக்கப்பட்ட ஒரு மருத்துவ முறையாகும்.

சித்த மருத்துவமானது சித்த வைத்தியத்துடன் நின்று விடுவதில்லை சித்த மருத்துவத்தில் சிறந்து விளங்கும் மெய்ஞானம், விஞ்ஞானம், உடல் தத்துவம், சமயம், சோதிடம், பஞ்சபட்சி, சரம், மருந்து மருத்துவம் போன்றவற்றை ஐயந்திரிபறக் கற்றுணர வேண்டும் என்ற வகையில் காணப்படுகின்றது.

சங்க இலக்கியங்களில் மருத்துவத்திற்கு அடிப்படையான பொருட்கள் உள்ளன. “சோதிடம் பஞ்ச பட்சி துவங்கிய சர நூல் மார்க்கம் கோதறுவகாரவித்தை குருமுனி ஓது பாடல் தீதிலாக்கக்கிடங்கள் செப்பிய கன்ம காண்டம் ஈதெல்லாம் கற்றுணர்ந்தோர்” இவர்களே வைத்தியராவார்... (சித்த நாடி நூல் 18 ) மனித சரீரத்தை மூன்று வகையாகப் பிரித்து உள்ளார்கள் சரீரமாகிய தேகத்தில் உயிர் தங்கியிருக்கக் காரணமாகிய வாதம்(காற்று), பித்தம்(உஷ்ணம்), சிலேத்துமம்(நீர்), இரச தாது, இரத்த தாது, மாமிச தாது, மே தோதாது, அஸ்தி தாது, மச்சை தாது, சுக்கில தாது, மலம், மூத்திரம் என்னும் பன்னிரண்டும் நாம் உண்ணும் உணவிலிருந்து பிரிக்கப்பட்டு பலத்தை -யும் இயக்கத்தையும், கொடுக்கும்.

*உண்டி முதற்றே உணவின் பிண்டம்
*உணவெனப்படுவது நிலத்தொடு நீரே (புறநானூறு 18)”

நாம் உண்ணும் உணவே உயிர் உடலிலிருக்க செய்யும் மருந்தாகும். அவரவர் தேகத்திற்கு பொருந்தாத மற்றும் முறையில்லாமல் உண்பதனாலும் நோய்கள் உற்பத்தியாகின்றன. நம் உடலில் வளி அழல் மற்றும் ஐயம் இவை மூன்றும் தாம் இருக்க வேண்டிய அளவில் கூடினாலும், குறைந்தாலும் நோய் தோன்றக் காரணமாக அமையும் இவைகளே வாத பித்த கப நோய்களாக பிரிக்கப்படும்.

## வாத நோய்கள்

வாதத்தில் முக்கியமாக எண்பது நோய்கள் உள்ளன. நரம்புவலி, நரம்புப்பிடிப்பு, காக்காய் வலிப்பு, பக்கவாதம், வாயு இரத்த அழுத்தம், இருதய நோய் முதலியவை இதில் அடங்கும். கடலும் கடல் சார்ந்த இடமுமாகிய நெய்தல் நிலத்தில் பெரும்பாலும் வாதம் தொடர்பான நோய்கள் வர வாய்ப்பு உள்ளது.

## பித்த நோய்கள்

பித்தத்தில் முக்கியமாக நாற்பது நோய்கள் உள்ளன வயிற்றுவலி, செரியாமை, வயிற்றுப்புண் மஞ்சட் காமாலை, இரத்தச்சோகை, இரத்த வாந்தி, கல்லீரல், பித்தப்பை கெட்டுப் போதல் போன்ற நோய்கள் இதிலடங்கும். இந்நோய்கள் வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருத நிலத்தில் பித்த நோய்கள் வர வாய்ப்புக்கள் அதிகம்.

## சிலேத்தும நோய்கள்

சிலேத்துமத்தில் தொண்ணூறு நோய்கள் முக்கியமானவை தடிமன், மூக்கில் நீர் வடிதல், இருமல், சலம், ஆஸ்துமா போன்றவை. “மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றியது உணின்” திருக்குறள் (நோய்விளைவிக்காதவை என்று கூறப்படுபவைகளை மட்டும் உண்டு வந்தால் மருந்து என்று எதுவும் தேவையில்லை)



## வண்ணமிழந்த மலர்கள்

வண்ணமிழந்த மலர்களாய்
வாகையிழந்த மரங்களாய்
மொட்டவிழ்ந்த மலர்களாய்
சிறகொடிந்த பறவைகளாய்
சிரிப்பற்ற சிட்டுக்களாய்
இருப்பதேனோ நீங்கள்
இருப்பதேனோ நீங்கள்??

பாடாய் படுத்தும் போதை
பாரினிலே படும்பாடு
தொலைதூரம் வரை
தொல்லை கொடுக்கும் தொலைபேசி
இருப்பதுதான்

குடும்பங்கள் எல்லாம் குழம்பியதே
குழப்பங்களும் மலிந்ததே
அன்பெனும் அடைக்கலமின்றி
ஆதரவற்று இருப்பதும்
ஆசைகள் ஆயிரம்
அத்தனையும் நிராசையானதுதான்

பெற்றாரும் உற்றாரும் இருக்க
பெற்ற பிள்ளைகள் எம்மை
கவனமின்றி கட்டவிழ்த்து விட்டனரே
கவலையோடு அலைவதும்
கவனிப்பாரன்றி திரிவதும் தான்

வெளிநாடும் சென்றனர்
வேண்டாத உறவும் வேண்டினர்
மிட்டாயும் வாங்கவில்லை
மிடுக்கான பொம்மையும் வாங்கவில்லை
எதிர்பார்ப்பெல்லாம் ஏமாற்றமானதுதான்

காமத்தில் கருகிய வண்டுகளானோம்
காதலில் உருகிய மெழுகுகளானோம்
பட்டமும் பெறவில்லை
பதவியும் பெறவில்லையே
வாழ வழி இருந்தும்
வாழ்க்கை இழந்ததுதான்
வீடு இருந்தும் வீதியோரம்
விடியல் இருந்தும் இருளோரம்
கல்வியிருந்தும் கடைத்தெருவோரம்
கடவுள் இருந்தும் காப்பவரின்றி
இருப்பதுதான்

சிறார்களும் வாழட்டும்
சிறையில் அல்ல
அன்பான கருவறைகளிலும்
ஆதரவான குடும்பங்களிலும்
வாழ வழி விடுங்கள் எங்களுக்கு
வாழ்த்துங்கள் எங்களை

க.ரேவதி - *CRPO*, பிரதேச செயலகம், காரைதீவு



## ஆன்மா

பாலை வனத்தில்
பட்டுப் போன
மரங்களைப் போல்
காற்றோடு காற்றாக
அண்டம் எல்லாம்
உருவிழந்த உடலோடு
நூலில் ஆடும் ஆன்மாவிற்கு
மரத்துப்போன உணர்வுகளே
மனதில் குடியிருக்கும்
தீராதது தீர்ந்திடாமல்
அடர்ந்த இருளில்
பூமி எல்லாம் வியாபித்து
அதன் ஒற்றை நிழல்
எங்கேனும் ஓர்
இடம் தங்கியிருக்கும்.
ஜடங்களின் அவலக் குரல்கள்
மீண்டும் மண்ணில் ஜனனம்
எடுத்தாலும் அல்லல்
பட்டுத்தான் ஆறுதலடையும்.

யோகராசா கவிதா
அன்னமலை



## பரதம்

பாரினில் பரதம்
வீரம் தான் ஆடிடும்
ஆனந்த தாண்டவம்
பக்தர்கள் நாடிட
சலங்கை மணிபோலே
கூடிடும் மங்கையர்
சிவன்பாதம் பணிந்திட
காற்றினில் வந்திடும்
கவிகளை கவியாழ
உயிர்வாழும் கலையின்
காதலில் சலங்கை ஒலியும்
கட்டிக்கொண்டு சங்கமித்தேன்
உன் காலடியில்
மனதோரம் கவிபாடும்
பண்பெனும் சிலையிலென் அலாதியும்
துன்பமும் இன்பமாகும்
கலையின்
அன்பெனும் அடைக்கலமும்
விண்ணும் மண்ணும்
குதித்தெழுந்து ஆடிடும் என்
மின்னலிடையின் ஆனந்த தாண்டவம்
விழியசைவின் வழியே
நவரசங்களின் பாவனையும்
தீர்ந்திடாப் பார்வை
தொலை தூரம் ஆனேன்...

யோகராசா கவிதா
அன்னமலை

# நாவிதன்வெளியில் பல்துறைக்கலைஞர் வெள்ளக்குட்டி பொன்னையா

ஏ.எல்.எம். ஷினாஸ், கே. நீலேந்திரன்



இவர் தற்போது நாவிதன்வெளி-01 கிராமத்தில் வாழ்ந்து வருகின்ற சிரேஸ்ட கலைஞர் ஆவார். இவர் துறைநீலாவணையில் 1953 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆந் திகதி பிறந்தார். இவருக்கு தற்போது வயது 71 வருடங்கள் ஆகின்றது. துறைநீலாவணை மகா வித்தியாலயத்தில் அப்போது மாணவராக கல்வி கற்கும் போதே கலைத்துறையில் கவனம் செலுத்தி தனது திறமைகளை வெளிக்காட்டியுள்ளார். இவரது திறமையினை கண்ட அவரது வகுப்பாசிரியர் அ.செல்லையா அவர்கள் இவருக்கு கூத்து, நாடகம், பாடல், நாட்டியம் போன்ற துறைகளிலே பயிற்சிகளை வழங்கி அவரை கலைத் துறைக்குள் உள்நுழைய வைத்தார். கலைத்துறையில் இருந்த ஆர்வத்தின் காரணத்தினால் தனது பாடசாலை கல்வினை தரம் - 09 உடன் இடைநிறுத்தி விட்டு கலை பயணத்தினை தொடர்ந்தார். பின்னர் துறைநீலாவணை கிராமத்தில் உள்ள பல அண்ணாவிமார்களிடன் சென்று முறைப்படி வசந்தன் கூத்து, காமன் கூத்து, காத்தவராயன் கூத்து மற்றும் நாடகம், நாட்டியம், கரகம், கும்மி, மேளவாத்தியம் இசைத்தல் போன்றவற்றை கற்றுப்பல அரங்குகளில் கிராமிய பாடல்களுக்கு மேளவாத்தியம் வாசித்தும் பல அரங்கேற்றங்களை செய்தும் அதன்மூலம் வரும் வருமானத்தின்மூலம் தனது குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்து வந்தார். நாவிதன்வெளி-01 கிராம அலுவலர் பிரிவிலுள்ள மாரியம்மன் ஆலய திருவிழாக்காலங்களில் அம்மன் தாலாட்டு தற்போது வரை பாடிக்கொண்டும் அவ் ஆலயத்தின் உதவிப் பூசகராகவும் இருக்கின்றார். துறைநீலாவணை கலை இலக்கியத் திற்கும் நாவிதன்வெளி கலை இலக்கியத்திற்கும் பாலமாக செயற்பட்டவர் வெள்ளக்குட்டி பொன்னையா அவர்கள் அன்றைய காலத்தில் துறைநீலாணை கண்ணகி அம்மன் ஆலயம் பல கலைஞர்களையும், அண்ணாவிமார்களையும் கொண்டு கபடியாட்டம், அம்மன் காவியம், கண்ணகி மதுரையினை எரித்த வரலாறு போன்றவற்றை மக்களின் கண்முன்னே தான் பல கலைஞர்களுடன் சேர்ந்து நடித்துக் காட்டியதாகவும் இவை அனைத்தும் தான் கலைத்துறையில் ஆற்றிய சேவைகள் எனவும் குறிப்பிட்டு சுட்டிக்காட்டினார்.

பின்னர் தனது 18ஆவது வயதில் திருமணம் செய்து கொண்டு நாவிதன் வெளி-01 கிராமத்தில் மனைவி மற்றும் தனது மூன்று குழந்தைகளுடனும் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றார். 22க்கும் மேற்பட்ட நாடகங்கள் நடித்து இருப்பதோடு 12 நவீன நாட்டுக் கூத்துக்கள் ஆடியுள்ளார். நாவிதன்வெளி பிரதேசத்திலுள்ள ஆலயங்களிலும் அரிச்சந்திரர் கதை கூத்துகளில் நடித்தும் அம்மன் காவியம் பாடியும் தனது கலைத்திறமையினை மக்களுக்கு வெளிக்காட்டி பல இளங் கலைஞர்களையும் அப்பிரதேசத்தில் உருவாக்கியுள்ளார். இவர் நாவிதன் வெளி பிரதேச செயலகம், கலைஞர் சுவதம், கிழக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய பல்வேறு விருதுகள் மற்றும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். தற்போது வயது முதிர்வு காரணமாக உடல் நிலை சரியாக இல்லாத காரணத்தினால் கூத்து, நடிப்புத்துறைகள் தவிர்த்து கிராமிய பாடல்களை பாடியும் மேளவாத்தியம் வாசித்தும் தனது கலைத்துறை சேவையினை தற்போது மேற்கொண்டு வருகின்றார். இவரது கலைச் சேவைக்காக கலைஞருக்கான ஓய்வூதியம் கிழக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கியுள்ளது. இதனைப் பெற்று வாழ்கை நடாத்தி வருகின்றார்.

தனது இளமைக்காலத்தில் மக்கள் கலைஞர்களின் கூத்துக்கள், நாடகங்களை பார்த்து ரசிப்பதற்கு கிராமம் கிராமமாக மாட்டுவண்டி பூட்டி வருவதை கண்டால் தனது கஷ்டங்கள் கவலைகள் அனைத்தும் மறைவதாகவும் கூறினார். தற்போது கலைத் துறைகளில் இடம் பெறும் பாடல்கள் பல பழைய கிராமிய பாடல்கள் போல் இல்லை என்றும் அவரது காலத்தில் ஒலிப்பதிவு செய்து கேட்கும் சாதனங்கள் இல்லாமையினால் தனது இளம் வயது குரல் ஓசையினை பதிவு செய்ய முடியாமல் போய் விட்டதாகவும் தனது கவலையினை வெளிப்படுத்தினார். இவரது இலக்கிய பயணம் இன்னும் நீடிக்க வேண்டும் என்பதுடன் வருங்கால சந்ததிகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.